பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 05 2025          7 15

செவ்வாய்க்கிழமை          காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

2. இந்திய ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டியது அவசியம் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்தர் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. கனடாவில் இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாத சம்பவங்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்நாட்டு தூதரக அதிகாரிகளிடம் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

4. இலங்கையில் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

5. கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் கர்நாடகா 4 தங்கம் உள்பட 9 பதக்கங்களுடன் முதல் இடத்தில் உள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல் ஏற்கத்தக்கல்ல என்றும், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் கூறினார்.

இந்த தாக்குதலில் தொடர்புடையவர்கள் சட்டப்படி நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்து வரும் சூழலில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டம் திரு. குட்ரெஸ் தலைமையில் நடைபெற்றது.

பதற்றத்தை தணிக்கவும், இருதரப்பிலும் ராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகளுக்கும் ஐ.நா. எப்போதும் ஆதரவளிக்கத் தயார் என்றும் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் தெரிவித்தார்.

<<<<>>>>

பாதுகாப்பு ஒத்திகை குறித்து அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களுடன் மத்திய உள்துறைச் செயலாளர் திரு. கோவிந்த் மோகன் இன்று ஆலோசனை நடத்த உள்ளார்.

இது தொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்கள் உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒத்திகை நிகழ்ச்சிகளை நாளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் படைகள் தயார்நிலை குறித்த ஒத்திகை நடத்துவதுடன், பதற்றமான சூழலின்போது செயலாற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஒத்திகையை மேற்கொள்ளுமாறு உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

கிராமப்புற அளவிலும் இதுபோன்ற பாதுகாப்பு ஒத்திகையை நடத்துமாறு அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

சி.பி.ஐ. இயக்குநர் நியமனம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கண்ணா, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் சி.பி.ஐ.-யின் புதிய இயக்குநரை தேர்வு செய்வது தொடர்பாக விரிவான ஆலோசனை நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தற்போதைய சி.பி.ஐ. இயக்குநர் திரு. **Praveen Sood**-ன் பதவிக் காலம் இம்மாதம் 25ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் புதிய இயக்குநரை தேர்வு செய்வதற்கான பணிகள் தொடங்கி உள்ளன.

<<<<>>>>

இந்திய கடற்படை மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட தண்ணீருக்கடியில் சென்று தாக்கவல்ல அதிநவீன பன்முக வெடிகுண்டு சோதனையை நடத்தியுள்ளது.

வெற்றிகரமாக இந்த சோதனை நடத்தப்பட்டதற்கு **DRDO** மற்றும் கடற்படையினருக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நீருக்கு அடியில் போர்த்திறனை மேம்படுத்தும் இந்திய கடற்படையின் திறனுக்கு இந்த சோதனை மேலும் வலுசேர்க்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் நவீன ரக கப்பல்களுக்கு மாற்றாக இந்திய கடற்படையின் திறனை மேம்படுத்தும் வகையில் பன்முக வெடிகுண்டு சோதனை நடத்தப்பட்டிருப்பதாகவும், கடற்படையில் இணைப்பதற்கு தயாராக உள்ளதாகவும் **DRDO** தலைவர் திரு. சமீர் காமத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்திய ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டியது அவசியம் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்தர் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று தமது அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவை தலைமையாகக் கொண்டு புதிய கண்டுபிடிப்புகள், தீவிர தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பு பகிர்வு உள்ளிட்ட அறிவியல் ரீதியிலான வளர்ச்சியில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள **Anusandhan** தேசிய ஆராய்ச்சி அமைப்பு மற்றும் பூகோள அடிப்படையிலான தேசிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் திரு. ஜிதேந்தர் சிங் கேட்டுக்கொண்டதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

கனடாவின் டொரண்டோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அங்கு வசிக்கும் இந்தியர்களுக்கு எதிரான வாசகங்கள் பயன்படுத்தப்பட்டதற்காக புதுதில்லியில் உள்ள அந்நாட்டு தூதரக அதிகாரிகளிடம் மத்திய அரசு கவலை தெரிவித்துள்ளது.

கனடா தூதரக அதிகாரிகளை நேரில் அழைத்து இதனைத் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள், இந்த விஷயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

பிரிவினைவாத செயல்களுக்கு எதிராகவும், வெறுப்புணர்வை தூண்டும் வகையிலான பேச்சுக்களை தவிர்க்க வேண்டும் என்றும் அப்போது இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் படகுகளை மற்ற பயன்பாட்டிற்கு படுத்துவதை தடுக்க இலங்கை அரசுடன் பேசி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் குப்வாரா, பாரமுல்லா உள்ளிட்ட எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் நேற்றிரவும் துப்பாக்கிச்சூடு நடத்தி தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்திய ராணுவத்தினரும், பதிலடி தாக்குதல் நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பூஞ்ச், ரஜோரி, மெந்தார், நவ்ஷேரா, சுந்தர்பானி, அக்னூர் ஆகிய இடங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

<<<<>>>>

இலங்கையில் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

கடந்த 8 மாதங்களில் 3வது முக்கிய தேர்தலாக இத்தேர்தல் நடைபெறுகிறது.

ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணி உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

மாலை 4.30 மணி வரை நடைபெறும் வாக்குப்பதிவைத் தொடர்ந்து, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஏமன் நாட்டின் செங்கடல் நகரமான **Hodeida**-வில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக வான்வழித் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் முக்கிய விமான நிலையத்தின் மீது கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து ராணுவம் இந்த அதிரடி தாக்குதலை நடத்தியுள்ளது.

**Hodeida**-வில் இஸ்ரேல் ராணுவனத்தினர் 6 முறை அடுத்தடுத்து தாக்குதலை நடத்தியதாகவும், **Bajil** மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை சேதமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களைக் கண்டறிந்து மாநில அரசு அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி தேசிய மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பாகிஸ்தானியர்கள் தங்கியிருப்பதாக தகவல் வெளியாகி இருப்பதாகவும், அதுபோன்ற நபர்களை வெளியேற்ற முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

குஜராத், ஆந்திரா, அசாம், தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 10 மாநிலங்களில் இன்று ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு இடியுடன் கூடிய புழுதிக் காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பீஹாரில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் கர்நாடகா 4 தங்கம், 5 வெள்ளி என 9 பதக்கங்களுடன் முதல் இடத்தில் உள்ளது.

தில்லி 2 தங்கம் உள்ளிட்ட 6 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ராஜஸ்தான் 2 தங்கம் உட்பட 3 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

மூன்றாம் நாளான இன்று ஹாக்கி, டேபிள் டென்னிஸ், சைக்ளிங் மற்றும் ரக்பி போட்டிகள் நடைபெறுகின்றன.

<<<<>>>>

தைபேய் ஓபன் பேட்மிட்டன் போட்டித் தொடர் இன்று தொடங்குகிறது.

இதில் உலகின் முன்னணி வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த், இளம் வீரர்கள் **Anmol Kharb**, **Unnati Hooda** ஆகியோர் இந்திய அணிக்கு தலைமையேற்று பங்கேற்கிறார்கள்.

<<<<>>>>

சீனாவின் ஷாங்காயில் இன்று தொடங்கும் உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்திய மகளிர் அணிக்கு ஜோதி சுரேகா, தீபிகா குமாரி ஆகியோர் தலைமை தாங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் - தில்லி அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

**<<<<>>>>**

இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மும்பையில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The end>>>>**